

We Shine Academy™

guiding you to get through

# நடப்பு நிகழ்வுகள்
# (CURRENT AFFAIRS)
## ஜனவரி - 2020

*We Are Here..!! To Guide You..!!*



# WeShine Study Circle

# TNPSC

## நடப்பு நிகழ்வுகள்

## (CURRENT AFFAIRS)

## ஜனவரி - 20.01.2020


Main Office @

**WeShine Study Circle**
Chrompet, Chennai
Phone: 8939144344, 8939244344

Branch Office @

**WeShine Study Circle**

Plot No: 47/60, “AK” Block,
7th Main Road, Anna Nagar
Chennai, Tamil Nadu – 600 040.

3rd Floor, West Wing, GokulArcarde,
No.2, Sardar Patel Road, Adyar
Chennai, Tamil Nadu– 600020.

https://weshineacademy.com

# பொருளடக்கம்


- தேசிய நிகழ்வுகள்
- விளையாட்டு செய்திகள்
- முக்கிய தினங்கள்









# தேசிய நிகழ்வுகள்

- **பீகார்** அரசின் **சுற்றுச்சூழல் பாதுகாப்பு திட்டத்திற்கு ஆதரவாக மனித சங்கிலி பேரணி** நடைபெற்றது.
    - பீகார் அரசின் சுற்றுச்சூழல் பாதுகாப்பு, சமூக நீதி சீர்திருத்தம் ஆகிய நடவடிக்கைகளுக்கு ஆதரவாக விழிப்புணர்வு பேரணி நடைபெற்றது.
    - மையக்கரு – **"நீர்-வாழ்க்கை-பசுமை'**
    - **தேர்வுத் துளிகள்:**
        - பீகார் தலைநகர் **பாட்னாவில் உள்ள காந்தி மைதானத்தில் முதல்வர் நிதிஷ் குமார்** கைகளை கோர்த்து மனித சங்கிலி **பேரணியை தொடக்கி வைத்தனர்.**
        - மனித சங்கிலி பேரணியில் தண்ணீர் மனிதன் என அழைக்கப்படும் ராஜேந்திர சிங் கலந்து கொண்டார்
        - பீகார் மாநில ஆளுநர் பாகு சௌகான்

- குடியுரிமை திருத்தச் சட்டத்திற்கு எதிராக, உச்சநீதிமன்றத்தில் மனுதாக்கல் செய்த கேரள அரசிடம் அந்த மாநில ஆளுநர் அறிக்கை கோரியுள்ளார்.
    - குடியுரிமை சட்டத்திற்கு எதிராக கேரளா அரசு முதன்முதலாக கேரள சட்டப்பேரவையில் தீர்மானம்

நிறைவேற்றியது. அதைத் தொடர்ந்து கடந்த 13-ம் தேதி உச்சநீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்தது.

- மாநில ஆளுநரிடம் விவாதிக்காமல் உச்சநீதிமன்றத்தை நாடியது. அவை அலுவல் விதிகள் 34(2)-ன் படி சட்ட விரோதம் என்று ஆளுநர் அறிக்கை சமர்பித்துள்ளார்.
- **தேர்வுத் துளிகள்:**
  - பாகிஸ்தான், வங்கதேசம், ஆப்கானிஸ்தான் ஆகிய நாடுகளில் மத ரீதியிலான துன்புறுத்தலுக்கு உள்ளாகி, கடந்த 2014, டிசம்பர் 31-ஆம் தேதிக்கு முன் இந்தியாவில் குடியேறிய முஸ்லீம் அல்லாத அகதிகளுக்கு இந்திய குடியுரிமை அளிக்க சிஏஏ மசோதா நிறைவேற்றப்பட்டது
  - **அவை அலுவல் விதி 34(2): “மத்திய—மாநில அரசுகளுக்கு இடையேயான உறவை பாதிக்கும் விவகாரங்களில் முடிவெடுக்கும்போது முதலில் ஆளுநரிடம் மாநில அரசு தெரிவிக்க வேண்டும்.**
  - குடியுரிமை சட்டத்திற்கு எதிராக கேரளா, பஞ்சாப் மாநிலங்களில் சட்டப்பேரவையில் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

- **இலங்கை அதிபருடன் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் தோவல் சந்தித்து பேசினார்.**
  - இலங்கை பாதுகாப்புத்துறைக்கு இந்தியா ரூ.350 கோடி அளிக்கும் என அஜித் தோவல் உறுதியளித்துள்ளார்.

- இது தவிர உளவுத் தகவல்களை சேகரிப்பதற்கான தொழில்நுட்ப உதவிகளை இலங்கைக்கு இந்தியா அளிக்க இருப்பதாக தகவல் தெரிவித்துள்ளது.
- **தேர்வுத் துளிகள்:**
    - வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் வாழக்கூடிய தமிழ் மக்களுக்கு 50,000 வீடுகள் கட்டி தருவதாக பிரதமர் மன்மோகன் சிங் உறுதி அளித்திருந்தார். அதற்கான செலவு கிட்டத்தட்ட 350 மில்லியன் டாலர்.
    - இந்தியா-இலங்கை முக்கிய ஒப்பந்தங்கள்:
        - நேரு—ஜான் கொடலாவாலா உடன்படிக்கை 1954
        - சாஸ்திரி—சிறிமாவோ உடன்படிக்கை 1964
        - ராஜீவ் - ஜெயவர்த்தனே உடன்படிக்கை 1987

## விளையாட்டு செய்திகள்

- **5000 ரன்களை துரிதமாக கடந்த கேப்டன்கள் - விராட் கோலி புதிய உலக சாதனை படைத்தார்.**
    - இந்திய முன்னாள் கேப்டன் தோனி 127 ஒருநாள் போட்டிகளில் இந்த சாதனையை நிகழ்த்தி இருந்தார்.
    - தற்போது விராட் கோலி 82 இன்னிங்ஸில் கடந்து புதிய உலக சாதனை படைத்துள்ளார்.
    - **தேர்வுத் துளிகள்:**
        - ஐசிசி ஒருநாள் மற்றும் டெஸ்ட் பேட்ஸ்மன் தரவரிசையில் விராட் கோலி முதலிடத்தில் உள்ளார்.

- இதே போட்டியில் ரோஹித் சர்மா ஒருநாள் ஆட்டத்தில் 9000 ரன்களை கடந்த வீரர் என்ற சிறப்பை பெற்றார்.

## முக்கிய தினங்கள்

- **"ஜனவரி 20 - 27 : சாலை பாதுகாப்பு வாரம்"**
    - **நோக்கம்:** பொதுமக்களிடையே சாலை விதிகள் குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்த இந்திய அரசாங்கம் ஒவ்வொரு வருடமும் ஜனவரி மாதம் சாலை பாதுகாப்பு வாரத்தை அனுசரிக்கிறது.
    - **தேர்வுத் துளிகள்:**
        - உச்சநீதிமன்ற சாலை பாதுகாப்பு குழுவின் வழிகாட்டுதலின் படி 2016-ஆம் ஆண்டை அடிப்படை ஆண்டாகக் கொண்டு 2020-ஆம் ஆண்டிற்குள் சாலை விபத்துகள் மற்றும் அதனால் ஏற்படும் விபத்துக்களை 50% குறைக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.
        - தற்பொழுது 31-வது சாலைப் பாதுகாப்பு வாரம் கொண்டாடப்படுகிறது.

## திருக்குறள்

**குறள் எண்: 83**

குறள் பால்: அறத்துப்பால்

குறள் இயல்: இல்லறவியல்

குறள் அதிகாரம்: விருந்தோம்பல்

**வருவிருந்து வைகலும் ஓம்புவான் வாழ்க்கை**

**பருவந்து பாழ்படுதல் இன்று.**

**விளக்கம்:** நாள்தோறும் தன்னிடம் வருகின்ற விருந்தினரைப் பேணி உபசரிப்பவனின் வாழ்க்கை, வறுமையால் வருந்திக் கெடுவது இல்லை.

We Shine Academy™